மாநாட்டில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.

ஐ.சி.எஸ்.எஸ்.ஆர். நிதி உதவியுடன்

செயற்கை நுண்ணறிவு-பசுமை புரட்சி ஆராய்ச்சி தேசிய மாநாடு

திண்டுக்கல், டிச.15– திண்டுக்கல் ஜி.டி.என். கலைக்கல்லூரி, மத்திய நூலகம் மற்றும் நூலகம் தகவல் அறிவியல் துறையின் சார்பில் செயற்கை நுண்ணறிவு மற்றும் பசுமை புரட்சி என்ற தலைப்பில் 2024ம் ஆண்டுக்கான மாநாடு நடைபெற்றது. ஜி.டி.என். கல்லூரி தாளாளரும், செயலாளருமான ரத்தினம் மாநாட்டை தொடங்கி வைத்தார். மாநாட்டு புத்தகத்தின் முதல் பிரதியை கல்லூரி இயக்குனர் துரை பெற்றுக் கொண்டார். கல்லூரி முதல்வர் சரவணன் தலைமை உரையாற்றினார்.

இதில் காந்திகிராம பல்கலைக்கழக துணைவேந்தர் பஞ்சநதம் நூல்களை பற்றி கருத்துகள், செயற்கை நுண்ணறிவில் இயங்கும் கருவிகள் பற்றி விரிவாக கூறினார். திராவிட பல்கலைக்கழக துணைவேந்தர் துரைச்சாமி, பாரதிதாசன் பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் சீனிவாசராகவன், டெல்லி பல்கலைக்கழக மூத்த பேராசிரியர் ராஜேஸ்குமார், டாக்டர் முரளி பிரசாத், ஒய்வு பெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக பேராசிரியர் சின்னச்சாமி, மைசூர் பல்கலைக்கழக டாக்டர் சந்திரசேகரா, முனைவர் சுரேந்திரபாபு, ஸ்ரீவெங்கடேஷ்வரா பல்கலைக்கழக பாதிரியார் ஜான் நீலன் கவில், காந்திகிராம கல்லூரி பேராசிரியர் வெங்கட்ரவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை ஜி.டி.என். கல்லூரி நூலகர் அரவிந்த் செய்திருந்து நன்றி கூறினார்.

என் பள்ளி வாழ்க்கையை படமாக்க ஆசை

–நடிகர் யோகி பாபு

ஆர் கே. வித்யாதரன் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ஸ்கூல். குவாண்டம் பிலிம் பேக்டரி தயாரித்துள்ள இந்தப் படத்தில் யோகி பாபு, கே.எஸ். ரவிக்குமார், பூமிகா, நிழல்கள் ரவி, செப் தாமு, பக்ஸ் சாம்ஸ் உள்பட பலர் நடித்துள்ளனர்.

மேலும் பள்ளி மாணவிகளாக தற்போது பயின்று கொண்டிருக்கும் மாணவ மாணவிகள் படத்தில் நடித்துள்ளனர். இளையராஜா இசையமைத்துள்ளார்.

இந்நிலையில் படத்தின் இசை வெளியீடு மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா சென்னையில் நேற்று மாலை நடந்தது.

விழாவில் யோகி பாபு கலந்து கொண்டு பேசியதாவது:–

இந்தப் படத்திற்கு பியூன் கதாபாத்திரத்துக்கு தான் என்னை முதலில் கூப்பிட்டனர்.

யாரோ ஒரு வாத்தியார் கூப்பிட்டு வரவில்லை போல. அதனால் என்னை வாத்தியார் ஆக்கிவிட்டார்கள். நான் படித்தது அரசு பள்ளி. 97, 98 ஆண்டுகளில் ரொம்பவும் ஜாலியாக இருந்த காலம் அது. எனது உண்மையான பள்ளி வாழ்க்கையை சினிமாவாக எடுக்க 16, 17 வருடங்களாக போராடிக் கொண்டிருக்கிறேன். இந்த படத்தின் தயாரிப்பாளர் மனசு வைத்தால் எடுத்து விடலாம்.

ஸ்கூல் படத்தில் நடித்துள்ள பூமிகா உள்பட அனைவரும் நன்றாக நடித்திருக்கின்றனர். முதன்முதலாக நடிகர் தாமு அண்ணனை இப்போதுதான் பார்க்கிறேன். ஏதாவது படம் பண்ணுகிறீர்களா என்று கேட்டேன். நான் மாணவர்களோடு சென்று விட்டேன். அது போதும் என்று கூறினார். தாமு அண்ணனை பார்த்து காமெடி நடிகர்களாக நாங்கள் நடித்துக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கோவில் வளாகத்தில் லட்ச தீப வழிபாடு நடைபெற்ற போது எடுத்த படம்.

தாடிக்கொம்பு

சவுந்தரராஜபெருமாள் கோவிலில் லட்ச தீப வழிபாடு

தாடிக்கொம்பு, டிச.15– திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பு சவுந்தரராஜ பெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் திருக்கார்த்திகை தீபத் திருநாளுக்கு மறுநாள் லட்சதீப வழிபாடு நடைபெறுவது வழக்கமாகும். இதன் தொடர்ச்சியாக நேற்று லட்ச தீப வழிபாடு நடைபெற்றது. இதற்காக சவுந்தரராஜ பெருமாளுக்கு மாலை சிறப்பு அபிஷேகத்தை தொடர்ந்து சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தார்.

ஏகாந்த கோலத்தில் புறப்பட கோவில் மணி ஒலிக்கப்பட்டு சன்னதியில் இருந்து திருக்கோடி தீபம் புறப்பட்டது. இதனைத் தொடர்ந்து பக்தர்கள் கோவில் வளாகத்தில் அடுக்கி வைக்கப்பட்டு இருந்த ஒரு லட்சத்திற்கு மேலான கார்த்திகை தீப விளக்குகளில் விளக்கு ஏற்றினர்.

குறிப்பாக கோவிலின் வெளிபிரகா பரிவாரத்தில் பல்வேறு அழகிய வடிவங்களில் நேர்த்தியாக கார்த்திகை விளக்குகள் அடுக்கப்பட்டு அதில் தீபம் ஏற்றப்பட்டன. இப்பணிகளில் பள்ளி மாணவர்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் ஈடுபட்டனர்.

சிறப்பு அலங்காரத்தில் சவுந்தரராஜ பெருமாள்.

தொடர்ந்து சவுந்தரராஜ பெருமாள் திருக்கோடி தீபத்துடன் பரிவாரம் வலம் வந்து ராஜகோபுரம் அருகே வந்தார். இதன் பின்னர் கோவில் முன்பாக உள்ள திருக்கோடி தீப கம்பத்தில் பட்டாச்சாரியார்களால் திருக்கோடி தீபம் ஏற்றி வைக்கப்பட்டது. அப்போது பக்தர்கள் கோவிந்தா கோவிந்தா என கோவிந்த நாமத்தை உரக்க பாடினர். கோவிலின் பரிவாரத்தில் பெருமாளின் சங்கு சக்கரம் உள்ளிட்ட பல்வேறு வடிவங்களில் அழகிய அத்தப்பூ கோலம் போடப்பட்டு அதிலும் விளக்குகள் ஏற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து திரு கோடிதீபத்திலிருந்து சவுந்தரராஜ பெருமாள் தேரடிக்கு வந்தார். அங்கும் சிறப்பு பூஜைக்கு பின்னர் சொக்கப்பனை கொளுத்தப்பட்டது. இதன்பின் திருக்கார்த்திகை மண்டபத்தில் ஏகாந்தகோலத்தில் சவுந்தரராஜ பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். அங்கு பாராயணம் பாடப்பட்டு சிறப்பு வழிபாடுகள் நடத்தப்பட்டன.

விழாவில் சண்முகவேல் மில்ஸ் குழும நிர்வாக இயக்குனர்கள் வேலுச்சாமி கவுண்டர், கந்தசாமி கவுண்டர், பி.எம்.எஸ். முருகேசன் உள்ளிட்ட தொழிலதிபர்கள், தாடிக்கொம்பு பேரூராட்சி தலைவர் கவிதா சின்னத்தம்பி உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விளக்கு ஏற்றி சுவாமி தரிசனம் செய்தனர். விழா ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் விக்னேஷ் பாலாஜி தலைமையில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், வாசுதேவன், சுசீலா, கேப்டன் பிரபாகரன், ராமானுஜம், செயல் கோவில் பட்டாச்சாரியார்கள் ராமமூர்த்தி, ரமேஷ் ஜெகநாதன், மணியம் அரவிந்தசாமி மற்றும் அலுவலக பணியாளர்கள் செய்து இருந்தனர்.

மலைக்கா அரோராவின் இளமை ரகசியங்கள்

ஷாருக்கானுடன் தக்க தைய்ய தைய்ய என்ற பாடலுக்கு நடனமாடி பிரபலமானவர் மலைக்கா அரோரா. தொடர்ந்து இந்தி திரை உலகில் பல படங்களில் நடித்து பிரபல நடிகையாக திகழ்ந்து வருகிறார். சினிமா மட்டுமின்றி விளம்பர நிகழ்ச்சிகள் மற்றும் சின்னத்திரை நிகழ்ச்சி தொகுப்பாளராக இருந்து வருகிறார்.

மலைக்கா அரோரா தயாரிப்பாளர் போனி கபூர் மகனான அர்ஜுன் கபூரை காதலித்து வந்தார். திருமணம் ஆகாமலேயே இருவரும் சேர்ந்து வாழ்ந்து வந்தனர். திடீரென இவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் சமீபத்தில் பிரிந்தனர்.



முன்னதாக அர்பாஸ் கானை திருமணம் செய்து விவாகரத்து பெற்ற மலைக்கா அரோரா சினிமா நடிப்பு மட்டுமின்றி உடல் கட்டுகோப்பு விஷயத்திலும் அக்கறை கொண்டவர்.

யோகா, உடற்பயிற்சி, தியானப் பயிற்சியில் ஈடுபடும் 53 வயதான மலைக்கா அரோரா தீவிர உடற்பயிற்சி செய்யும் புகைப்படங்களை வெளியிட்டுள்ளார்.

அவர் உடல் நலம் குறித்து சமீபத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'மது'வால் தூக்கம், கல்லீரல் பாதிக்கப்படுவது மட்டும் இன்றி உடல் வீக்கமும் ஏற்படும். உடல் மற்றும் மன ஆரோக்கியத்துக்கு தூக்கம் இன்றியமையாதது.

தினமும் 8 மணி நேரம் தூங்க வேண்டும். சரியான தூக்கம் நோய் எதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்துவதுடன் மன அழுத்தத்தை குறைக்கும். உடல் ஆரோக்கியம் போல மன ஆரோக்கியம் முக்கியமானது. ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்யுங்கள். வழக்கமான பயிற்சிகளுக்கு கூடுதலாக தினமும் நடைபயிற்சியின் போது 10,000 படிகளை இலக்காக கொள்ள வேண்டும். நச்சு தன்மையுடன் கூடிய உணவை தவிர்க்க வேண்டும். இரவு 8 மணிக்கு பிறகு சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு உடல் ஆரோக்கியம் குறித்த தகவல்களை பகிர்ந்து உள்ளார் மலைக்கா அரோரா.

அஜித் நடித்த குட் பேட் அக்லி படப்பிடிப்பு நிறைவு

ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் அஜித் குட் பேட் அக்லி என்ற படத்தில் நடித்து வருகிறார்.

அஜித்தின் 13–வது படமான இந்த படத்தில் திரிஷா, பிரசன்னா, சுனில் அர்ஜுன் தாஸ் உள்பட பலர் நடித்துள்ளனர். வருகிற பொங்கல் பண்டிகையில் படம் திரைக்கு வர இருக்கிறது.

இதையொட்டி படத்தின் படப்பிடிப்பு பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. ஐதராபாத், ஸ்பெயின், பல்கேரியாவில் போன்ற இடங்களில் நடந்து முடிந்துள்ளது. கடைசி நாள் படப்பிடிப்பில் அஜித், ஆதிக் ரவிச்சந்திரன் பேசிக்கொண்டிருக்கும் படங்களை இசையமைப்பாளரான ஜி.வி. பிரகாஷ் தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

அமெரிக்காவில் கமல்ஹாசன்

ஏ.ஐ. தொழில் நுட்ப படிப்பிற்காக கமல்ஹாசன் அமெரிக்கா சென்று உள்ளார். இதையொட்டி அமெரிக்காவில் சிகாகோ நகரில் இருக்கும் புகைப்படங்களை கமல்ஹாசன் இன்று வெளியிட்டுள்ளார்.

மினுக்கம்பட்டி பகுதியில் நாளை மின்தடை

வேடசந்தூர், டிச.15– வேடசந்தூர் அருகே உள்ள மினுக்கம்பட்டி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணி நடைபெற உள்ளதால் நாளை (16–ம் தேதி) காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை அய்யர்மடம், கோட்டைமேடு, குரும்பபட்டி, மினுக்கம்பட்டி,வி.புதுக்கோட்டை, சிக்குபள்ளம்புதூர்,கேத்தம்பட்டி, தோப்புப்பட்டி, குன்னம்பட்டி, குட்டம், ஆசாரிப்புதூர், எஸ். சுக்காம்பட்டி, கொன்னாம்பட்டி ஆகிய பகுதிகளில் மின்வினியோகம் இருக்காது என வேடசந்தூர் உதவி செயற்பொறியாளர் முத்துப்பாண்டியன் அறிவித்துள்ளார்.

பல பேர் என்னை ஏமாற்றி விட்டனர்

பணம் கொடுக்கவில்லை என்றால் 'கஞ்சன்' என்று அழைக்கின்றனர்

–நடிகர் எம்.எஸ். பாஸ்கர்

பிரபல நகைச்சுவை மற்றும் குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடித்து தமிழ் சினிமா ரசிகர்களை கவர்ந்து வருபவர் நடிகர் எம்.எஸ். பாஸ்கர். பணம் வாங்கிக் கொண்டு பலர் தன்னை ஏமாற்றி வருவதாக அவர் கூறினார்.

இது பற்றி எம்.எஸ்.பாஸ்கர் மாலைமலருக்கு அளித்த பேட்யின் விவரம் வருமாறு:–

பெரிய பெரிய ஓட்டல்களில் சாப்பிடுவதை விட சிறிய ஓட்டல்கள், டீக்கடைகள், தள்ளுவண்டி கடைகளில் சாப்பிடுவதை விரும்புபவன் நான்.

காரணம் அதனால் அவர்களுக்கு வாழ்வாதாரம் கிடைக்கும். இன்னொன்று அங்கு சுவையும் நன்றாக இருக்கும்.

எனவே இது போன்ற கடைகளில் சாப்பிடுவதில் நான் ஈடுபாடு உள்ளவன்.

அப்படி ஒரு நாள் ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ஒருவர் நேராக என்னிடம் வந்து சுகர் மருந்து வாங்க வேண்டும் உதவி பண்ண முடியுமா என கேட்டார். நானும் ரூ. 100 கொடுத்து மருந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினேன். ஓட்டலில் சாப்பிட்டு விட்டு வெளியில் வந்து கை கழுவும் போது எதிரே உள்ள டாஸ்மாக் கடைக்கு என்னிடம் பணம் வாங்கியவர் செல்வதை பார்த்தேன். என்னடா இது சுகர் மருந்து இங்கேவா விற்கிறார்கள்? என்று நினைத்துக் கொண்டேன்.

இதுபோன்று டீக்கடை ஒன்றில் டீ குடித்துக் கொண்டிருந்தேன்.

அங்கு திரைத் துறையைச் சார்ந்த ஒருவர் வந்தார். உங்களைப் பார்க்கத்தான் நான் வந்தேன் ஆனால் நீங்களே எதிர்க்க வந்து நிற்கிறீர்கள் என்று கூறினார். அவர் சொல்லும் போதே பொய் சொல்கிறார் என தனியாக தெரிந்தது. சரி என்ன விஷயம் என கேட்டேன். உங்களை வைத்து படம் பண்ண போகிறேன். அந்த கதாபாத்திரத்துக்கு நீங்கள் தான் பொருத்தமானவர். எனவே நீங்கள் தான் பண்ண வேண்டும். இப்போது தயாரிப்பாளரை பார்க்க செல்கிறேன். மாலை உங்களை செல்போனில் தொடர்பு கொள்கிறேன். அதே நம்பர் தானே வைத்துள்ளீர்கள் .என்னிடம் உங்கள் நம்பர் இருக்கிறது. இருந்தாலும் ஒருமுறை சொல்லுங்கள் என நம்பரை கேட்டு வாங்கிக் கொண்டார்.

அதுபோல் அன்று மாலை போன் பண்ணினார்.

தயாரிப்பாளரிடம் பேசி விட்டேன். அவர் பலர் பெயரைச் சொல்லி நடித்தால் நன்றாக இருக்கும் எனக் கூறினார். நான் முடியாது எம்.எஸ். பாஸ்கர் தான் இதில் நடிக்க வேண்டும் என கண்டிப்பாக கூறிவிட்டேன். அவர் நடிக்கவில்லை என்றால் உங்களுக்கு நான் பண்ண மாட்டேன் என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டேன். அடுத்த வாரம் நீங்கள் அட்வான்ஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

அடுத்ததாக மகனுக்கு கல்லூரி கட்டணம் ரூ.25 ஆயிரம் செலுத்த வேண்டும்.

எனக்கு தர முடியுமா என்று கேட்டார்.

நான் அடுத்த வாரம் அட்வான்ஸ் வரும்போது தருகிறேன் என சொன்னேன்.

இல்லை இப்போதே கல்லூரியில் கட்ட வேண்டும் என்றார்.

நீங்கள் யாரிடமாவது வட்டியுடன் வாங்கிக் கொள்ளுங்கள். அடுத்த வாரம் அட்வான்ஸ் பணம் வந்ததும் வட்டியுடன் நான் உங்களுக்கு தந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டேன். அப்படியா என போனை வைத்து விட்டார். இப்படிப்பட்ட வர்களுக்கு நான் பணம் கொடுக்காவிட்டால் என்னை கஞ்சன் என்று சொல்கிறார்கள்.

கஞ்சனாக இருப்பது நல்லதா ஏமாந்தவனாக இருப்பது நல்லதா என்று பார்த்தால் கஞ்சனாக இருப்பதே நல்லது. கடந்த 2012–ம் வருடம் அக்டோபர் 10–ம் தேதி தெரிந்த நண்பர் ஒருவர் வியாபாரம் பண்ண வேண்டும் எனக்கு ரூபாய் 7 லட்சம் கிடைக்குமா என்று கேட்டார் நானும் கொடுத்து விட்டேன். இப்போது வருடம் 2024 ஆகிறது. இதுவரை அவர் பணத்தை இதோ அதோ என்று இழுத்தடித்துக் கொண்டே செல்கிறார். சரி நமக்கு "புத்தி கொள்முதல்'என நினைத்துக் கொண்டேன்.

இதுபோல் பல பேரிடம் ஏமாந்தவன் நான். போற்றுவார் போற்றட்டும் தூற்றுவார் தூற்றட்டும் என்னை கஞ்சன் என்று சொன்னால் சொல்லிவிட்டு போகட்டும்.

இவ்வாறு எம்.எஸ். பாஸ்கர் கூறினார்.

இல்லத்திற்கு அழகும், ஐஸ்வர்யமும் தரும்

ராணிமுத்து 2025 காலண்டர்

இப்போது விற்பனையில்...

ராணி முத்து

ஜனவரி 2025
1
WED
ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்து

குரோதி
மார்கழி
17
புதன்

துவிதியை நள்ளிரவு கடந்து அதிகாலை 4.02 வரை உத்திராடம் நள்ளிரவு 1.31 வரை
அமிர்த - சித்த யோகம் சந்திர தரிசனம்
ஸ்ரீரங்கம் நம்பெருமாள், காஞ்சிபுரம் வரதராஜர் தலங்களில் பகற்பத்து விழா. ஆழ்வார்திருநகரி நம்மாழ்வார் ராஜாங்க சேவை.
ராகு 12-1.30 குளிகை 10.30-12 எமகண்டம் 7.30-9 துவிதியை திதி
ஆங்கிலப் புத்தாண்டு அரசு விடுமுறை சந்திராஷ்டமம் : மிருகசீரிடம்-திருவாதிரை
↑ மேல்நோக்கு நாள் நல்ல நேரம்: 10.30-11.30 1.30-2.30 4.30-5.30

2025

Printed at RANI PRINTERS. CHENNAI-7